1001

Register Number

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

ii) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை எழுதுக : 4 × 2 = 8

1. கம்பர் இயற்றிய வேறு நூல்கள் யாவை ?

2. எட்டுத்தொகை நூல்கள் யாவை ?

3. நடுங்க வரும் துன்பம் யாருக்கில்லை ?

4. தேம்பாவணி - பொருள் கூறுக.

5. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை ?

6. தேவார மூவர் யாவர் ?

[ Turn over

www.kalvisolai.com - 2 of 8.



II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3 × 4 = 12

7. இறைவாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளைக் கூறுக.

8. தலைவியைச் சந்தித்துச் செல்லும் தலைவனிடம் தோழி வரைவுகடாயவற்றை நற்றிணை வழி விளக்குக.

9. வினைத்திட்பத்தின் சிறப்பைத் திருவள்ளுவர் எங்ஙனம் காட்டியுள்ளார் ?

10. கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதம் யாது ?

11. கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யாவை ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக: 3 × 4 = 12

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை ?

13. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

14. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து வரைக.

15. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும், வேண்டாததும் யாவை ?

16. சிலுவையிற் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு அஞ்சலி செய்கிறார் ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. 'செய்ந்நன்றியறிதல்' பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. இராவணன் வருகையும், அதன்பின் நிகழ்ந்தனவுமாகிய செயல்களை அனுமன் உரைத்த பாங்கினை இருபது வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

19. குழந்தைத் தொழிலாளர் அவலநிலையைக் கவிஞர் அப்துல்ரகுமான் கூறுமாறு தொகுத்து வரைக.

www.kalvisolai.com - 3 of 8.



V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. $4 \times 1 = 4$

20. "யாரு மில்லை தானே கள்வன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ" —

அ) 'கள்வன்' எனக் குறிப்பிடப்பட்டவன் யாவன் ?

ஆ) இஃது யார், யாரிடம் கூறிய கூற்று ?

இ) இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

ஈ) இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

*அல்லது*

21. "கடமை புரிந்தான் இவனே"

அ) கடமை புரிந்தவன் யாவன் ?

ஆ) இது யார் கூற்று ?

இ) இது யாரிடம் கூறிய கூற்று ?

ஈ) இத்தொடர் இடம் பெற்றுள்ள நூல் எது ?

VI. 22. "இந்திய நாடிது" எனத் தொடங்கும் நாட்டு வாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. $4 + 2 = 6$

23. "அறிவற்றம்" எனத் தொடங்கும் குறளையும் "அரிது" என முடியும் திருக்குறளையும் அடிபிறழாது எழுதுக. $2 + 2 = 4$

VII. 24. எவையேனும் ***இரண்டு*** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. $2 \times 2 = 4$

அ) அசைத்த ஆ) வந்தனன் இ) செய்க

ஈ) கேட்டி உ) ஆடுகின்ற ஊ) விடுவார்.

www.kalvisolai.com - 4 of 8.



25. பின்வரும் கீழ்க் கோடிட்ட தொடர்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்பு எழுதுக. 3 × 2 = 6

அ) <u>தினந்தினம்</u> ஆ) <u>ஒழுகு நீர்</u>

இ) <u>மாமணி</u> ஈ) <u>சேவடி</u>

உ) <u>பசிக்கயிறு</u> ஊ) <u>கன்னிபாலன்.</u>

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2 × 2 = 4

அ) பகலுறை ஆ) மாசற்றார் இ) நின்னருள்

ஈ) கற்கோடி உ) தீக்குச்சி ஊ) பூஞ்சோலை.

27. சான்று தந்து விளக்குக. 1 × 4 = 4

பாலைத்திணை அல்லது பொருண்மொழிக் காஞ்சித்துறை

28. "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை 1 × 4 = 4

இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டுக.

***அல்லது***

சொற்பொருட்பின்வரு நிலையணி அல்லது எடுத்துக்காட்டு உவமையணி விளக்குக.

VIII. பொருத்துக : 4 × 1 = 4

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| 29. | மணிமேகலை | — | கிருஷ்ணப்பிள்ளை |
| 30. | தேவாரம் | — | உமறுப்புலவர் |
| 31. | சீறாப்புராணம் | — | சீத்தலைச் சாத்தனார் |
| 32. | இரட்சணிய யாத்திரிகம் | — | சுந்தரர் |
| | | — | குணங்குடி மஸ்தான். |

www.kalvisolai.com - 5 of 8.



IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16 × 1 = 16

33. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்

அ) சிவன்

ஆ) திருமால்

இ) முருகன்.

34. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்

அ) 11

ஆ) 65

இ) 75.

35. அகநானூறு மணிமிடைப் பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 100

ஆ) 120

இ) 180.

36. நற்றிணையைத் தொகுப்பித்தவன்

அ) ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்

ஆ) ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

இ) பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி.

37. 'கபிலரை வாய்மொழிக் கபிலர்' என்று போற்றியவர்

அ) நக்கீரர்

ஆ) பெருங்குன்றூர்க்கிழார்

இ) மாறோக்கத்து நப்பசலையார்.

www.kalvisolai.com - 6 of 8.



38. "குறட்பா" என்பது

அ) நாலடி வெண்பா

ஆ) மூவடி வெண்பா

இ) ஈரடி வெண்பா.

39. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

அ) பழமொழி

ஆ) திருவள்ளுவமாலை

இ) நாலடியார்.

40. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு

அ) படலம்

ஆ) இயல்

இ) காதை.

41. "சிறிய திருவடி" என்றழைக்கப்படுபவர்

அ) கருடன்

ஆ) அனுமன்

இ) வீடணன்.

42. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

அ) சதுரகராதி

ஆ) பேரகராதி

இ) அரும்பத அகராதி.

www.kalvisolai.com - 7 of 8.



43. 'பிரபந்தம்' என்னும் வடசொல் உணர்த்தும் பொருள்

அ) நகைச்சுவை நூல்

ஆ) நன்கு கட்டப்பட்டது

இ) அறிவுரை நூல்.

44. பாரதிதாசன் வெளியிட்ட இதழ்

அ) தேன்மழை

ஆ) குயில்

இ) தென்றல்.

45. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

அ) பாரதியார்

ஆ) பாரதிதாசன்

இ) நாமக்கல் கவிஞர்.

46. 'உவமைக்கவிஞர்' எனப் பாராட்டப்பட்டவர்

அ) சுப்பிரமணிய பாரதி

ஆ) சுரதா

இ) கண்ணதாசன்.

47. 'கிறித்துவக் கம்பர்' என்றழைக்கப்பட்டவர்

அ) கம்பர்

ஆ) வீரமாமுனிவர்

இ) எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை.

www.kalvisolai.com - 8 of 8.



48. சுந்தரர் தேவாரம்

அ) முதலாந்திருமுறை

ஆ) ஏழாந்திருமுறை

இ) பன்னிரண்டாந்திருமுறை.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. எழுமை ................ உள்ளுவர் தங்கண்

விழுமந் துடைத்தவர் ................ .

50. அஞ்சுவ ................ பேதைமை அஞ்சுவ

தஞ்சல் ................ தொழில்.